# Tamilnadu Sub Inspector Syllabus in Tamil

## Tn SI Recruitment 2019 - 969 Vacancies

**Notification: https://wp.me/p7JanY-5qY**

**Syllabus: https://wp.me/p7JanY-6e6**

**Previous Questions: https://wp.me/p7JanY-5v5**

**Model Questions: https://wp.me/p7JanY-5v2**

## பகுதி – I

## பொது அறிவு

**(பொதுவான மற்றும் காவல்துறை சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கானது)**

காவல்துறை சார்பு ஆய்வாளர் பதவிக்கான தேர்வு பட்டப்படிப்புத் தரத்தில் அமையும். எல்லாப் பாடங்களிலும் +2 தரத்தை அடிப்படையாகக் கொண்டு, பட்டப்படிப்புத் தரம் வரையுள்ள அடிப்படை அறிவைச் சோதிக்கும் வகையில் வினாக்கள் அமையும்.

### 1. பொது அறிவியல் (General Science)

இப்பகுதி வினாக்கள் நன்கு கல்வி கற்ற ஒரு மனிதனின் அறிவியல் அறிவைச் சோதிப்பதாக அமைக்கப்படும். அறிவியல் துறைகளில் சிறப்பான அறிவைச் சோதிக்காமல், அன்றாட வாழ்வில் நாம் தினந்தோறும் கண்டறியும் அறிவியல் உண்மைகளையும் அனுபவங்களையும் சோதிப்பதாக இப்பகுதி அமையும். இயற்பியல், வேதியியல், உயிரியல், அறிவியல் விதிகள், அறிவியல் கருவிகள், அறிவியல் கண்டுபிடிப்புகள், புதிய கண்டுபிடிப்புகள், மனித உடலியல், நோய்களும் காரணங்களும், அவற்றைக் குணப்படுத்துதலும் வருமுன் தடுத்தலும், உணவும் சரிவிகித உணவும், மனித பாரம்பரியவியல், மிருகங்கள், பாலூட்டிகள், பறவைகள், சுற்றுச்சூழல், சுற்றுச்சூழலியல், தனிமங்கள், கலவைகள், அமிலங்கள், அடிப்படைப் பொருட்கள், உப்புக்கள் மற்றும் தொடர்புடைய துறைகள், பூமி சுழற்சி, நியூட்டனின் இயக்க விதிகள், பருப்பொருட்களின் உள்ளடக்கம், தேசியப் பரிசோதனைக் கூடங்கள் மற்றும் அது தொடர்பான தலைப்புகளில் இப்பகுதி வினாக்கள் அமையும். இந்த தலைப்புகளில் இருந்து அடிப்படை அறிவைச் சோதிப்பதாகவே வினாக்கள் அமையும்.

### 2. இந்திய வரலாறு (History of India)

சிந்து சமவெளி கால நாகரிகம் தொடங்கி இன்றுள்ள இந்திய நவீன நிர்வாகமுறை வரையுள்ள இந்திய வரலாற்றுப் பகுதிகளின் நாட்களும் முக்கிய சம்பவங்களும் தொடர்பான கேள்விகள் அமையும்.

**3. புவியியல் (Geography)**

இந்தியாவின் சமயங்கள், வானிலை, பருவக்காற்று மற்றும் காலநிலை, மழைப்பொழிவு, இயற்கைப் பேரிடர்கள், பயிர்கள், சாகுபடி முறைகள், இந்தியாவின் முக்கிய நகரங்களும் இடங்களும், மலைவாசஸ்தலங்கள், தேசியப் பூங்காக்கள், பெரிய துறைமுகங்கள், பயிர்களும் கனிமப் பொருட்களும், பெரிய தொழிற்சாலைகளின் இருப்பிடங்கள், காடுகளும் சரணாலயங்களும், இந்தியாவின் மக்கள் தொகைப் பரவல் மற்றும் தொடர்புடைய தலைப்புகளிலிருந்து வினாக்கள் அமையும்.

**4. பொருளாதாரமும் வணிகமும் (Economics and Commerce)**

விவசாயம், இந்தியாவின் முக்கியப் பயிர்கள் மற்றும் சாகுபடி முறைகள், தொழிற்சாலை வளர்ச்சி, தமிழகத்தின் பெரிய, நடுத்தர மற்றும் குடிசைத் தொழில்கள், இந்தியாவின் கிராமிய வளர்ச்சி, வீட்டுவசதி, குடிநீர் வசதி மற்றும் இதர வளர்ச்சித் திட்டங்கள், விலைவாசிக் கொள்கை, பணவீக்கம், மக்கள்தொகை, வேலையில்லாத் திண்டாட்டம், ஏற்றுமதி, இறக்குமதி, ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் தொழில் வளர்ச்சி பற்றிய பாடங்களிலிருந்து வினாக்கள் அமையும்.

**5. இந்திய அரசியலமைப்பு (Indian Polity)**

இந்திய அரசியலமைப்பும் அதன் சிறப்பியல்புகளும், குடியுரிமை, தேர்தல்கள், இந்தியப் பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள், மாநிலங்களின் நிர்வாக அமைப்புமுறை, நீதித்துறை அமைப்பு, உள்ளாட்சி நிறுவனங்கள், மத்திய-மாநில உறவுகள், மொழிக்கொள்கை, வெளியுறவுக் கொள்கை போன்ற பாடப் பகுதிகளிலிருந்து வினாக்கள் அமையும்.

**6. நடப்புக்கால நிகழ்ச்சிகள் (Current Events)**

அறிவியல் தொழில்நுட்பத்தில் சமீப கால வளர்ச்சிகள், இந்தியாவின் வரலாறு, அரசியல் வளர்ச்சிகள், வணிகம், போக்குவரத்து, தகவல் தொடர்பு முறைகளில் வந்துள்ள போக்குவரத்து, தகவல் தொடர்பு முறைகளில் வந்துள்ள புதுமைப் போக்குகள், ஆடல், நாடகம் போன்ற நுண்கலைகள், திரைப்படங்கள், ஓவியம் வரைதல், சிறந்த இலக்கியப் படைப்புகள், விளையாட்டுகள், பந்தயங்கள், தேசிய மற்றும் சர்வதேச விருதுகள், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள், சுருக்க விளக்கங்கள், யார்? எவர்? நூல்களும், ஆசிரியர்களும், பொதுவான தொழில்நுட்பங்கள், இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும், அண்மைக்கால இந்தியா மற்றும் தொடர்புடைய தலைப்புகள், தமிழ்நாட்டின் கலை, இலக்கியம், பண்பாடு தொடர்பான பாடப் பகுதிகளிலிருந்து வினாக்கள் அமையும்.

**பகுதி-II**

## உளவியல்

### (பொதுவான மற்றும் காவல்துறை சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கானது)

### 1. காரண-காரியப் பகுப்பாய்வு (Logical Analysis)

எந்த ஒரு தகவலையும் காரண-காரியத் தொடர்புடன் பகுப்பாய்தல் மற்றும் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் பல்வேறு பரிமாணங்களைப் பகுத்தாய்தல் பற்றிய கேள்விகள் இடம்பெறும்.

### 2. எண் தொடர்புடைய பகுப்பாய்தல் (Numerical Analysis)

தேர்வாளர்கள் எண் தொடர்புடைய வினாக்களும் எவ்வளவு விரைவாகப் பதிலளிக்க முடியும் என்பதை சோதிக்கும் வகையில் இப்பகுதி வினாக்கள் அமையும்.

### 3. தகவல் தொடர்புத் திறன் (Communication Skills)

தேர்வு எழுதுவோர் எவ்வளவு திறமையாகக் கையாள முடியும்? என்பதைச் சோதிப்பதாக இப்பகுதி அமையும்.

### 4. தகவலை கையாளும் திறன் (Information Handling Ability)

தகவல்கள் கொடுக்கப்பட்டு அத்தகவல்களின் பல்வேறு பரிணாமங்களும், கருதுகோள்களும் மற்றும் தொடர்புடைய உண்மைகளும் கண்டறியும் திறனும் சோதிக்கப்படும்.

### 5. உளத்திறன் தேர்வு (Mental Ability Test)

இப்பகுதியில் தேர்வு எழுதுவோர் விதிவருமுறை மற்றும் விதிவிளக்க முறையை(Induvtive or deductive) பயன்படுத்தி வினாக்களுக்கு விடைகாணும் திறனைச் சோதிக்கும் வகையில் வினாக்கள் அமையும். பள்ளிக் கணக்குப் புத்தகங்களிலுள்ள அடிப்படைக் கணக்குகளும் தரப்படும்.

## காவல்துறை ஒதுக்கீடு விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்

**1. காவல்நிலை ஆணைகள் (PSO)**

காவல்நிலை ஆணைகளின் பிரிவுகளும் அதன் நடைமுறைகளும் காவல்துறை அன்றாடச் செயல்பாடுகளில் எவ்வாறு பயன்படுகிறது என்பதைச் சோதிப்பதாக வினாக்கள் அமையும்.

**2. காவல் நிர்வாகம் (Police Administration)**

காவல்துறையின் அன்றாடச் செயல்பாடுகள் மற்றும் நிர்வாக முறைகள் தொடர்புடைய பொதுவான விதிகள் பற்றிய அறிவைச் சோதிப்பதாக இப்பகுதி வினாக்கள் அமையும்.

**3. குற்ற விசாரணை முறைச் சட்டம் (Cr. PC.), இந்திய தண்டனைச் சட்டம் (IPC), இந்திய சாட்சியச் சட்டம் (Indian Evidence Act)**

காவல் நிலையங்களிலும், நீதிமன்றங்களிலும் வழக்குகள் நடத்துவதற்கும் அன்றாடம் பயன்படும் சட்டங்கள் தொடர்புடைய அடிப்படை அறிவைப் பற்றிய வினாக்கள் இப்பகுதியில் கேட்கப்படும்.

winmeen.com